**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.101/2018**
**Prosecution Witnesses: 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துமாரி | Caste | : |
| Father Name/ Husband Name | : மகாலிங்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(09.10.2025)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் வில்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சங்கரேஷ்வரியை எனக்கு தெரியும். அவரது திருமணத்திற்கு மட்டும் சென்றுள்ளேன். மற்றபடி எதுவும் தெரியாது. எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 09.09.2015 அன்று சங்கரேஷ்வரிக்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது என்றும் அவர் எதிரிகள் வீட்டில் கூட்டுக்குடித்தனமாக வாழ்ந்து வந்தார் என்றும் அவரது திருமண வாழ்க்கையில் 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் அவரை சாப்பிடவிடாமலும் தூங்கவிடாமலும் கொடுமை செய்து சங்கரேஷ்வரியிடம் நகையை கேட்டு துன்புறுத்தினார்கள் என்றும் சங்கரேஷ்வரியின் நகையை அவருக்கு தெரியாமல் 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் எடுத்து அவர்கள் வசம்

வைத்துக் கொண்டார்கள் என்றும் அதை திரும்ப கேட்டதற்கு சங்கரேஷ்வரியை கொலைமிரட்டல் விடுத்து துன்புறுத்தினார்கள் என்றும் அதன் பின்பு 1வது எதிரி 5வது எதிரியை 2வதாக திருமணம் செய்து கொண்ட விபரம் மற்ற எதிரிகளுக்கும் தெரியும் என்றும் இதுபற்றி சங்கரேஷ்வரி கேட்டதற்கு அனைவரும் சேர்ந்து சங்கரேஷ்வரியை அசிங்கமாக பேசி அனைவரும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**. இல்லை